<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்–2007–08ம் ஆண்டில் 95 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் வழங்குதல்–செலவினம்–ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகின்றன.

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே–2) துறை</u>

அரசாணை(நிலை) எண். 141 நாள்: 5.12.2007.

படிக்கப்பட்டது:

பழங்குடியினர் நல ஆணையர் நேர்முகக் கடித எண்.பமே/ஆ1/1756/2007 நாள் 28.9.2007.

........

<u>ஆணை:-</u>

2007–2008ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தின் போது ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள், ''286 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியரின் உடல் நலனை நன்கு பேணிக்காக்கும் வகையில் 2007–2008ஆம் ஆண்டில் இப்பள்ளிகள் அனைத்திலும், மொத்தம் ரூபாய் 8.58 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்க வசதி செய்யப்படும்'' என்ற அறிவிப்பினை சட்டமன்றப் பேரவையில் செய்துள்ளார்கள்.

2. பழங்குடியினர் நல ஆணையர் தமது கடிதத்தில், அரசாணை (நிலை) எண். 53 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத் (பிந–1) துறை நாள் 6.9.2006ல் உள்ள அரசாணையில் 2006–2007ம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் 150 மிகப்பிற்படுத்தப்பட்டோர், 50 சீர்மரபினர் விடுதிகளுக்குக் குடிநீர் சுத்திகரிப்புக் கருவியும் 1/8 HP மோட்டார் பம்பும் சேர்த்து ரூபாய் 11,000 வீதத்தில் 200 கருவிகளை ரூபாய் 22.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்க அரசு அனுமதித்து அணையிட்டுள்ளது என்றும், மேலும் அரசாணை (நிலை) எண். 47 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நலத் (பிந.1) துறை நாள் 1.6.2007ல் உள்ள அரசாணையில் 2007–2008ம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ், 400 பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் விடுதிகளுக்கு குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் ரூபாய் 11,000/– வீதத்தில் 400 கருவிகளை ரூபாய் 44.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்க அரசு அனுமதித்துள்ளது என்றும் 2006 – 2007 ம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்று.ம் சிறுபான்மையினர் நலத்துறை விடுதிகளுக்கு வாங்கி வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையைச் சார்ந்த பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகளிலும்,பிற்படுத்தப்பட்டோர் /மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் விடுதிகளுக்கு மேற்குறிப்பிட்ட அரசாணை (நிலை) எண். 53 நாள் 6.9.2006 மற்றும் 1.6.2007 நாளிட்ட அரசாணை (நிலை ) எண். 47ல் அரசு அனுமதி வழங்கியது போல், குடிநீர் சுத்திகரிப்புக் கருவி ஒன்றிற்கு ரூபாய் 11,000/– மதிப்பில், குடிநீர் சுத்திகரிப்புக் கருவிகள் வாங்கி வழங்குவதற்கான அரசின் ஆணையினை பெற்றுத் தரும்படியும், அமைச்சர் அவர்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள ரூபாய் 8.58 இலட்சத்தில் 78 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு 78 குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் ரூபாய் 11,000/– வீதத்தில் வாங்கி வழங்க இயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. பழங்குடியினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து ரூ.9,000/– வீதம் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்குவதற்காக 95 குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகளுக்கான செலவினமாக மொத்தம் ரூ.8.55 இலட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பத்தி ஐயாயிரம் மட்டும்) அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. குடிநீர் சுத்திகரிக்கும் கருவி பொருத்தப்படவுள்ள அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளை உரிய வழிமுறைகளின்படி, அவசியம் கருதி தெரிவு செய்து, அவற்றின் பெயர்பட்டியல் தனியே வெளியிடுவதற்கு பழங்குடியினர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத்தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:

| | |
|---|---|
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் |
| 02 | பழங்குடியினர் நலம் |
| 277 | கல்வி |
| | பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் |
| II | மாநிலத் திட்டம் |
| JC | மாணவர் இல்லம் இணைத்த பழங்குடியினர் பள்ளிகளைத் தொடங்குதலும் பராமரித்தலும் |
| 19 | இயந்திரமும் சாதனமும் |
| 01 | வாங்குதல் |

(DPC 2225 02 277 JCL915)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்திற்கான நிதி 2007–08ஆம் ஆண்டில் திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்படும். 2007–08ஆம் ஆண்டின் திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதியொதுக்கத்தை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரமளிக்கப்படுகின்றது.

6. தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தச் சட்டம் 1998 மற்றும் 2000ம் ஆண்டின் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகளைப் பின்பற்றி குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் வாங்கி வழங்கப்படவேண்டும் என பழங்குடியினர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிக்கும் கருவிகள் வாங்கி வழங்கிய பின்னர் அது குறித்து விரிவான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அலுவலர் சார்பற்ற எண்.77677/ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்/ நாள் 30.11.2007 பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். ASL No. 1395) (ஆயிரத்து முன்னூற்று தொன்னூற்று ஐந்து)

சி.முத்துக்குமாரசாமி,
அரசு செயலாளர்

(ஆளுநரின் ஆணைப்படி)

<u>பெறுநர்</u>
ஆணையர், பழங்குடியினர் நலம், சென்னை–5
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5
அணைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18/35/6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5

<u>நகல்</u>
நிதி(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் / வரவு செலவு–1 / வரவு செலவு–2)துறை,சென்னை–9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை–9
முதலமைச்சர் அலுவலகம்,சென்னை–9
செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்,சென்னை–9.
.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்